MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



Printed Matter

ஜூலை
3

மார் தோமாவின் நினைவு நாள்

To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



வணக்கத்திற்குரிய
பேராயர்
மார் இவானியோஸ்
ஆண்டகையின்
நினைவுத்திருநாள்

ஜூலை
15

மலர் 23 ஜூலை 2026 இதழ் 07

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.07.2026 | Wednesday | | Class on Grace and Pneumatology | St. Mary's Major Seminary Nalanchirai |
| 04.07.2026 to 05.07.2026 | Saturday to Sunday | | TNBC Gathering | Madurai |
| 06.07.2026 to 10.07.2026 | Monday to Friday | | Class on Grace and Pneumatology | St. Mary's Major Seminary |
| 11.07.2026 | Saturday | 10.00 am | Baptism | Thiruvalla |
| 13.07.2026 | Monday | 6.00 am | Holy Mass - Pathayathira | Cathedral Marthandam |
| 13.07.2026 | Monday | | Class on Grace and Pneumatology | St. Mary's Major Seminary Nalanchirai |
| 13.07.2026 | Monday | 3.30 pm | UCC - Meeting | Kuzhithurai |
| 14.07.2026 | Tuesday | 6.00 pm | Evening Prayer / Candle Procession | Pattom |
| 15.07.2026 | Wednesday | 8.00 am | Mar Ivanios Day | Pattom |
| 16.07.2026 | Thursday | 10.00 am | Fresher's Day | Mar Ephraem College, Elavuvilai |
| 17.07.2026 to 18.07.2026 | Friday to Saturday | | Class on Grace and Pneumatology | St. Mary's Major Seminary Nalanchirai |
| 19.07.2026 to 24.07.2026 | Sunday to Friday | | Annual Retreat to Priests - Batch I | Idukki Diocese |
| 26.07.2026 to 31.07.2026 | Sunday to Friday | | Annual Retreat to Priests - Batch II | Idukki Diocese |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23   ஜூலை 2026   இதழ். 07

***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*






மலர். 23   ஜூன் 2026   இதழ். 06


**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
## Bulletin of the
## Diocese of Marthandam



**முக்கியமான நாட்கள்**

ஜூலை 2026

மலர்.23 ஜூலை 2026 இதழ்.07

| | |
|---|---|
| 01 | தேசிய மருத்துவர் தினம் (இந்தியா) |
| 07 | உலகளாவிய மன்னிப்பு தினம் |
| 11 | உலக மக்கள் தொகை தினம் |
| 12 | தேசிய எளிமை தினம் |
| 15 | உலக இளைஞர் திறன் தினம் |
| 17 | சர்வதேச நீதிக்கான உலக தினம் |
| 20 | சர்வதேச சதுரங்க தினம் |
| 22 | தேசியக் கொடி தினம் (இந்தியா) |
| 27 | APJ அப்துல் கலாம் அவர்களின் நினைவு தினம் தேசிய பெற்றோர் தினம் |
| 28 | உலக இயற்கை பாதுகாப்பு தினம் |
| 29 | சர்வதேச புகள் தினம் |
| 30 | சர்வதேச நட்பு தினம் |

**உள்ளடக்கம்**

1. Circular 03
2. மார்த்தாண்டம் மறைமாவட்ட விழா மேதகு ஆயரின் பெயர்விழா 07
3. New Appointments of Priests 2026 08
4. Change of Address 10
5. குருமடச் செய்திகள் 12
6. ஆயரின் ஐரோப்பிய பயணம் 13
7. MacKK Malankarai Catholic Kalai Koodam 14
8. MIDS 15
9. MCA 19
10. புனித வின்சென்ட் தே பவுல் சபை 20
11. Health for One Million (Hom) 21
12. பெயர்விழா நல்வாழ்த்துகள் 22
13. திருமண ஆயத்தப்பயிற்சி 22
14. கொமித்சியச் செய்திகள் 23
15. மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி, கிராத்தூர் 24
16. Hom - Special School for the Intellectually Disabled 25
17. ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள் 26
18. இம்மாதம் நினைவு கூர 27
19. Bishop's Diary 28

Printed by
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot. No. CCL 2/2026 04.06.2026

## சுற்றறிக்கை

## குருமட தினம்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே !*

திருத்தூதர்களான புனித பேதுரு மற்றும் புனித பவுல் ஆகியோரின் திருவிழா (ஜூன் 29) நமது திருஅவையின் பொதுக் குருத்துவப் பயிற்சி நிலையமான திருவனந்தபுரம் புனித மரியன்னை மலங்கரை குருத்துவக் கல்லூரியின் நிறுவல் ஆண்டு விழாவாகும். இந்நாள் குருமடதினமாக கொண்டாடப்படுகின்றது.

இஸ்ராயேல் மக்களை இறைவனுடைய மக்களாக நிலை நிறுத்திய உடன்படிக்கையின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று கடவுள் எல்லாக் குலங்களுக்கும் நிலப்பகுதிகளை வழங்கிய போது, லேவி குலத்தாருக்கு தனியான பங்கை வழங்காமல், “நானே அவர்களுடைய பங்கு” என்று கூறியதேயாகும் (இச 10:9). மேலும், ஆலயப் பணிகளில் ஈடுபட்டிருந்தோர், இறைவனுக்குச் செலுத்தப் பட்ட காணிக்கைகளிலிருந்து தங்களது வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வழியையும் கடவுள் ஏற்படுத்தினார். உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், லேவியர்கள் கடவுளுக்காக மீண்டும் அர்ப்பணிக்கப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டனர் என்பதைத் திருமறைகள் எடுத்துக் காட்டுகின்றன (எஸ்ரா 8:24-30).

பெந்தக்கோஸ்தே காலத்தை பக்தியுடன் அனுசரித்து வரும் நாம், இறைவனுடைய மக்களாக நம்மை நாமே புதுப்பித்துக் கொள்ளும் இந்த வேளையில், இவ்வாண்டின் குருமட தினத்தை கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை தனக்கென ஒரு குருத்துவக் கல்வி மையத்தை 1983-ஆம் ஆண்டில் நிறுவி, நீண்டகாலக் கனவை நனவாக்கியது. அந்நாள்முதல், அதன் கட்டட வளர்ச்சிக்கும் அன்றாடச் செயல்பாடுகளுக்கும் இறைமக்கள் அளித்து வரும் விசுவாசமிக்க தாராள பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

இறைவனின் எல்லையற்ற கருணையால், நமது இறையியல் கல்லூரியானது அதன் வரலாற்றிலேயே மிகப் பெரிய புதுப்பிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் சிற்றாலயத்தின் பலிபீடப் பகுதி புதுப்பிக்கப்பட்டது; உணவகம் சீரமைக்கப்பட்டது; நுழைவாயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

இறையியல் கல்விப் பிரிவை ஒரு முழுமையான கல்வி நிறுவனமாக உயர்த்துவதர்குத் தேவையான கூடுதல் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, கடந்த ஆண்டு புதிய வகுப்பறைகள், நிறுவன அலுவலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறைகள் கட்டப்பட்டு அர்ச்சிக்கப்பட்டன. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் இந்த ஆண்டிலேயே தொடங்கப்படும் என நம்பப்படுகிறது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கட்டட மற்றும் புதுப்பிப்புப் பணிகளுக்காக பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. மேலும், சுமார் நாற்பது ஆண்டுகள் பழமையான முதல் கட்டடத்தை முழுமையாகப் புதுப்பிப்பதற்குப் பெரிய தொகை தேவைப்படுகிறது. இதுவரை செலவிடப்பட்ட தொகையை விட அதிகமான நிதி அதற்குத் தேவைப்படும்.

திருச்சபையின் தலைவராகிய நான், இதுவரை மேற் கொள்ளப்பட்ட பணிகளுக்குத் தேவையான நிதியானது



வெளிநாடுகளில் வாழும் நமது விசுவாசச் சமூகங்கள், குருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களான அருட்தந்தையர்கள் மற்றும் நமது நலன்விரும்பும் நண்பர்கள் ஆகியோரின் தாராள ஆதரவினால் திரட்டப்பட்டது என்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். மேலும், நமது இறைமக்களின் ஒத்துழைப்பின் மீதான நம்பிக்கையே, இப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் துணிவை எமக்குத் தருகிறது.

புதுப்பிப்புப் பணிகள் தடையின்றி நடைபெற்று வந்தாலும், குருத்துவ கல்லூரியின் அன்றாடச் செயல்பாடுகள் கடுமையான நிதிச் சுமையை எதிர்கொண்டு வருகின்றன. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நமது பங்குகள் இணைந்து இந்நோக்கத்திற்காக கணிசமான தொகையைத் திரட்டினோம். அப்போது கிடைத்த நிதியும் பின்னர் பெறப்பட்ட உதவித் தொகைகளும், கல்லூரியின் நிலுவைக் கடன்களை அடைக்கவும், நிலையான வருவாய் தரும் பண்ணை வளர்ச்சிக்கும், அவசியமான பழுதுபார்ப்புப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

தற்போது, குருத்துவக் கல்லூரியின் ஆண்டு வருவாய்க்கும் ஆண்டு செலவுக்கும் இடையே கணிசமான பற்றாக்குறை நிலவுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அது ஈடுசெய்யப்படாததால் முப்பது இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான கடன் ஏற்பட்டுள்ளது.

நமது திருஅவையின் மதிப்புமிக்க நிலையான நிறுவனங்களில் ஒன்றான குருத்துவக் கல்லூரியை நடத்துவதற்கு, முந்தைய காலங்களைப் போல வெளிநாட்டு உதவிகளைச் சார்ந்திருப்பது இனி பொருத்தமல்ல. நிதி தொடர்பான புதிய சட்டம் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகளும் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இடமளிப்பதில்லை. திருச்சபையின் பொதுப்பணிகளுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளும் இன்று மிகவும் குறைந்து விட்டன.

எனவே, நிலையான வருவாய் வழிகளை அதிகரித்து, குருத்துவக் கல்லூரியை நிதி தன்னிறைவு பெற்ற நிறுவனமாக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை முழுப் பலனை அளிக்க இன்னும் சில காலம் தேவைப்படும். இந்நிலையில்,

நமது நம்பிக்கை சமூகம் மீண்டும் ஒருமுறை இதில் தாராள மனதுடன் அக்கறை செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு குருமட தினத்தில் பங்குத் தந்தையர்களும், பொறுப்பாளர்களும் சிறப்பு காணிக்கை மற்றும் பிற நன்கொடைகள் மூலம் தொகைகளைத் திரட்டி, தாமதமின்றி மறைமாவட்ட மையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், தனிநபர்களும் நிறுவனங்களும், குறைந்தபட்சம் ஒரு குருத்துவ மாணவரின் கல்விச் செலவுகளை ஏற்றுக்கொள்ளும் அளவிலான உதவித் தொகையை வழங்குமாறு அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். இது இறைவனின் அருளைப் பெறும் ஓர் உயர்ந்த வாய்ப்பாக அமையும்.

இவ்விடயத்தில் குருத்துவக் கல்லூரி நிர்வாகத்தினர் உங்களை அணுகும் போது, அவர்களுக்கு உரிய ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சபையைப் பல்வேறு வழிகளில் வலுப்படுத்துவதற்காக, ஒரு நம்பிக்கை சமூகமாக நீங்கள் தொடர்ந்து அளித்து வரும் அன்பான ஊக்கத்திற்கும் ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புனித பேதுரு மற்றும் புனித பவுல் திருவிழாவின் அருளும் ஆசீர்வாதமும் உங்கள் அனைவர் மீதும் நிறைவாக பொழிய இறைவனை வேண்டுகிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

இவண்,
ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்,

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையின்
உயர்பேராயர் - காதோலிக்கோஸ்



# மார்த்தாண்டம் மறைமாவட்ட விழா
# மேதகு ஆயரின் பெயர்விழா

ஜூன் மாதம் 29-ம் தேதி திங்கட்கிழமை மறைமாவட்ட தினம் மற்றும் மேதகு ஆயர் அவர்களின் பெயர்விழாவும் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது. அன்று காலை 6.30 மணிக்கு காலை ஜெபமும் 6:45 மணிக்கு ஆயர்களுக்கு ஆராதனை முறைப்படி வரவேற்பும் தொடர்ந்து மறைமாவட்ட நலனுக்காகவும் அதன் செயல்பாடுகளுக்காகவும் சிறப்பு திருப்பலி நம் மறைமாவட்ட ஆயர் அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக திருவனந்தபுரம் உயர்மறைமாநிலத்தின் துணை ஆயர் மேதகு யூஹானோன் மார் அலெக்சியூஸ் ஆண்டகை அவர்கள் மறைமாவட்ட விழா திருப்பலி மற்றும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு, மறைவுரை மற்றும் ஆயருக்கு பெயர்விழாவின் வாழ்த்து செய்தியும் வழங்கி சிறப்பித்தார்கள். திருப்பலியை தொடர்ந்து மேதகு ஆயர் அவர்களுக்கு பெயர்விழாவின் வாழ்த்துக்கூட்டம் நடைபெற்றது. வாழ்த்துக்கூட்டம் முடிந்து பெயர்விழா சிறப்பு நிதி உதவி சமர்ப்பணம் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் அனைத்து குருக்களும், துறவிகளும், பொது நிலையினரும் கலந்துகொண்டு சிறப்பாக மறைமாவட்டத்திற்காகவும் ஆயருக்காகவும் ஜெபித்தார்கள்.

# New Appointments of Priests 2026
## Marthandam Diocese

| S.No. | Name | Parish | Responsibilities |
|---|---|---|---|
| 1. | Fr. Peter Benedict Rajan | Mathar | District Vicar - Kulashekaram |
| 2. | Fr. Devadas | Meenachal | |
| 3. | Fr. Aruldas | Kirathoor Kidarakuzhy | District Vicar - Kollemcode Correspondant - Mar Gregorious Matriculation School |
| 4. | Fr. Justin Nullikad | Mathiasnagar Mukkadal | |
| 5. | Fr. Sibi | Konam | |
| 6. | Fr. Vinu Kumar | Sooriyacode | Correspondant - Mariagiri CBSE School |
| 7. | Fr. Maria John | Alwarkoil | |
| 8. | Fr. Franklin Jose | Mariagiri | Disctrict Vicar - Kaliyakkavilai |
| 9. | Fr. Darbello Christus | Mukkampalai | |
| 10. | Fr. Wilbright | Vettukuzhi Kulapparai | |
| 11. | Fr. Abinson | Adaikkakuzhy Punnamootukkadai | Editor - Malankarai Vilakku |
| 12. | Fr. Stephen Palavilai | Thachoorkonam | |
| 13. | Fr. Alex | Kattuvilai | Bursar - Mar Ephraem College, Spiritual Director - Minor Seminary |
| 14. | Fr. Johny Alfred | Madurai Mission | Studies - Dindugal |
| 15. | Fr. Ratheesh Joseph | Parvathipuram Aloor | |
| 16. | Fr. Abishek Raj | Zero Point | Hostel Director - Mar Ephraem College, Co-ordinator - St. Paul's Education Academy |



| S.No. | Name | Responsibilities |
|---|---|---|
| 17. | Fr. Jerome Godwin | Parish Priest Incharge of Seynamvilai and Vazhodu, Incharge of Diocesan Website, Studies - LLB |
| 18. | Fr. Paulson | Associate to Fr. Sibi Vice Rector - Minor Seminary |
| 19 | Fr. Maria Poppul Revin | Associate to Fr. Franklin Jose Assistant Director - MCYM |
| 20 | Fr. Ajin Alocious | Associate to Fr. Shaji Christo |
| 21 | Fr. Robin | Associate to Fr. Maria John Incharge of Diocesan Bulletin |
| 22 | Fr. Rejin | Associate to Very Rev Fr. Jose Bright Incharge of CSL |
| 23 | Fr. Sabin | Associate to Fr. S. Varghese Corepiscopa |
| 24 | Fr. Jeba Benadict | Assistant to Fr. Sunish Kumar |
| 25 | Fr. Sajin Sebastian | Delhi Mission |
| 26 | Fr. Gerson George | Assistant to Fr. Aruldas |
| 27 | Fr. Stephen Mathar | Secretary to Commission for Communication Media |
| 28 | Fr. Robinson | Master of Ceremony |
| 29 | Fr. Shiju Jose | Correspondent - Mar Chrysostom College |
| 30 | Fr. Jose Marthandam | Ministry - USA |
| 31 | Fr. Ajesh Francis | Studies - NISCORT Delhi |

# Change of Addresses

**Fr. Alex**
Mar Ephraem College of Engineering & Technology,
Malankara Hills, Elavuvilai P.O.,
K.K. District – 629 171.

**Rev. Fr. Peter Benedit Rajan**
Malankara Catholic Church
Mathar, Chenkody P.O.,
K.K. District – 629 177

**Rev. Fr. Aruldas**
Malankara Catholic Church
Kirathoor, Kirathoor P.O.
K.K.Dist – 629 160.

**Fr. Abishake Raj**
Mar Ephraem College of Engineering & Technology,
Malankara Hills, Elavuvilai P.O.,
K.K. District – 629 171.

**Fr. Rejin Raj**
Bishop's House
Marthandam – 629 165,

**Fr. Sabin**
Malankara Catholic Church
Panachamoodu, Mancode P.O.
K.K. District – 629 152

**Fr. Gerson George**
Malankara Catholic Church
Kirathoor, Kirathoor P.O.
K.K.Dist – 629 160.

**Rev. Fr. Albin**
Gurukulam,
Marmakil Study Centre,
Tank Bund Rd, Tavarekere,
Bhavani Nager, S.G. Palya,
Bengaluru – 560 029

**Fr. Wilbright**
Malankara Catholic ChurchKanchiyode,
Mancode P.O.
K. K. District - 629 152.

**Rev. Fr. Stephen Palavilai**
Malankara Catholic Church
Thachoorkonam, Karode,
Pin - 629 151, K.K.Dist.

**Rev. Fr. Justin Nullikad**
Malankara Catholic Church
Mathiasnagar, Boothapandy
P.O. K.K.Dist - 629 852

**Fr. Paulson**
Vice Rector
St. Ephraem Minor Seminary,
Elavuvilai, Elavuvilai P.O,
K.K. District – 629171.

**Fr. Robin**
Malankara Catholic Church
Pilankalai,
Mekkamandapam P.O.,
Pin. 629 166, K.K. District.



**Fr. Jeba Benedict**
Grace Home, Door No 8/29/2,
St. Michael The Archangel
Parvathipuram P.O.,
K.K. Dist – 629 003.

**Rev. Fr. Johny Alfred**
Anugraha Hostel,
St. Anthony's Friary Hostel,
Nochiodaipatti, Dindigul,
Pin – 624 003

**Fr. Franklin Jose**
Malankara Catholic Church
Mariagiri, Kaliakkavilai P.O,
K.K. District - 629 153

**Rev. Fr. Abinson Alex**
St. John Maria Vianney
Priests Home, Edaivilagam,
Kazhuvanthittai, Kuzhithurai P.O,
K.K.Dist – 629 163

**Fr.Vinu Kumar**
Malankara Catholic Church
Sooriacode, Sooriacode P.O.
K.K. Dist 629 190.

**Rev. Fr. Darbello Christus**
St. Mary's Malankara Seminary, Mar Ivanios
Vidya Nagar, Nalanchira,
Trivandrum – 695 015

**Fr. Jerome Godwin**
Malankara Catholic Church
15-67A, Kurusadi Street,
Vetturnimadam,
Parvathipuram P.O.,
K.K. Dist – 629 003.

**Fr. Maria Poppul Revin**
Malankara Catholic Church
Mariagiri, Kaliakkavilai
P.O, K.K. District - 629 153

**Rev. Fr. Ratheesh Joseph**
Malankara Catholic Church
15 - 67A, Kurusadi Street,
Vetturnimadam,
Parvathipuram P.O.,
K.K. Dist – 629 003.



# குருமடச் செய்திகள்

- ஜூன் 7 -ஆம் தேதி புனித எஃப்ரேம் இளம் குருமடத்தின் இந்த வருடத்திற்கான புதிய கல்வியாண்டானது காலை திருப்பலியுடன் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொடக்க விழாவும் புதிய கல்வியாண்டிற்கான வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன.
- ஜூன் 14 -ஆம் தேதி, முதலாம் ஆண்டு குருமடப் பயிற்சிக்காக புது குருமாணவர்கள், குமாரபுரம் பங்கிலிருந்து அருட்சகோதரர் ராகுல் மற்றும் மரியாகிரி பங்கிலிருந்து அருட்சகோதரர் ஜெறின் ஆகியோர் குருமடக் குடும்பத்தில் இணைந்தனர். அவர்களை குருமடக் குடும்பத்தினர் அன்புடன் வரவேற்றனர்.
- ஜூன் 18 -ஆம் தேதி, நமது முன்னாள் துணை அதிபர் அருட்தந்தை அஜேஷ் அவர்களுக்கு குருமடக் குடும்பத்தின் சார்பாக பிரிவு உபசார விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் மோன். ஜோஸ்பிறைட், அருட்தந்தை சதீஷ் குமார், அருட்தந்தை சில்ஜின் மற்றும் அருட்சகோதரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். குருமடக் குடும்பத்தினரும் தங்களது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்து, அருட்தந்தை அஜேஷ் அவர்களை அன்புடன் வழியனுப்பி வைத்தனர்.
- ஜூன் 21 -ஆம் தேதி, இளங்குருமடத்தின் புதிய துணை அதிபராக அருட்தந்தை பால்சன் அவர்கள் பொறுப்பேற்றார். குருமடக் குடும்பத்தினர் அவரை அன்புடன் வரவேற்று, அவரது புதிய பணி சிறப்புற அமைய வாழ்த்துக்களையும் ஜெபங்களையும் தெரிவித்தனர்.



# ஆயரின் ஐரோப்பா பயணம்

2026 ஜூன் 13 முதல் 15-ம் தேதி வரை உரோமில் வத்திக்கான் நகரில் வைத்து நடைபெற்ற ஐரோபா ஐக்கிய இராச்சிய மாநாட்டில் கலந்து கொண்டு இறைமக்களை ஆசீர்வதித்தார். மேலும் மலங்கரை கத்தோலிக்க ஆயர் பேரவையாக இணைந்து திருத்தந்தையை சந்தித்து ஆசிபெற்றார். இத்த ஆசீர் மிகுந்த சந்தியில் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தைக் குறித்தும், நாம் மேற்கொண்டிருக்கும் மறைபரப்பு பணிகளைக் குறித்தும் எடுத்துக்கூறினார். புனித பேதுரு பசலிக்காவில் ஆயர்கள் இணைந்து திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது.



MaCKK
Malankarai Catholic Kalai Koodam

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் நீண்டநாள் கனவுகளில் ஒன்றான கலைக்ககூடம் 29.06.2026 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. ஒலிபதிவு மற்றும் ஒலிகலவை அறையை முதன்மை குரு ஜோஸ் பிறைட் அடிகளார் திறந்து வைத்தார்கள். ஒளிப்பதிவு அறையை மார்த்தாண்டம் மேரிமக்கள் மாகாண தலைவி அருட்சகோதரி றோஸ் பிரான்சிஸ் அவர்கள் திறந்து வைத்தார்கள். படத்தொகுப்பு அறையை மேய்ப்புப்பணி அறிவுரை குழு செயலர் திரு. அருள்தாஸ் அவர்கள் திறந்து வைத்தனர். ஏராளமான குருக்களும், அருட்சகோதரிகளும் மற்று இறைமக்களும் கலந்து கொண்டார்கள். அருட்தந்தை ஸ்டீபன் மாத்தார் அவர்களின் தலைமையில் அவருடைய வெளிநாட்டு நண்பர்களின் உதவியுடன் துவங்கப்பெற்ற இக்கலைக்கூடமானது MaCKK என்ற பெயரில் துவங்குகிறது (Malankarai Catholic Kalai Koodam). இது மறைமாவட்டத்தின் பணிக்குழுக்களின் பணிகளை துரிதப்படுத்தவும் கலகளை வளர்க்கவுமாக துவங்கப்பெற்றது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## தளிர்கள் உலகம் – பசுமை வீரர் முகாம்

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டுவரும் தளிர்கள் உலகம் திட்டத்தில் 7 மற்றும் 8-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளுக்கு மே மாதம் 27, 28 மற்றும் 29 ஆகிய மூன்று தினங்கள்; மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து பசுமை வீரர் முகாம் என்னும் தலைப்பை மையமாக வைத்து கோடைகால பயிற்சி முகாம் நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். தொடர்ந்து மாணவர்களுக்கு வாழ்வியல் மதிப்பீடுகள், யோகா வகுப்புகள், புத்தக வாசிப்பு பயிற்சிகள், விளையாட்டுகள், மருத்துவ ஆலோசனைகள், படிக்கும் வழிமுறைகள், தலைமைத்துவம், காய்கறி தோட்டம் அமைக்கும் பயிற்சி, ஆன்மீக ஆலோசனைகள் போன்றவை குறித்து இந்த மூன்று நாட்களும் பல்வேறு பயிற்சியாளர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. வாழ்விற்கு தேவையான அடிப்படை பண்புகளை வளர்த்து, மாணவர்கள் தங்களை தாங்களே மெருகூட்டிக் கொள்ளும் விதத்தில் இந்த பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த பயிற்சி முகாமிற்கு வருகை தந்திருந்த மாணவர்கள் தங்களுக்கு இந்த பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாகவும், சலிப்பு ஏற்படாமல் மிகவும் உற்சாகமாக இருந்ததாகவும் கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 37 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். பயிற்சியின் நிறைவு நாளான 29.05.2026 அன்று மதியம் 1.30 மணிக்கு மறைமாவட்ட நிதிகாப்பாளர் பேரருட்தந்தை தேவதாஸ்

அவர்கள் தலைமையில் தளிர்கள் உலகம் திட்டத்தில் பயன்பெறும் 162 மாணவமாணவிகளுக்கு ரூபாய் 4,05,000/-கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு பயிற்சியானது நிறைவு பெற்றது. இந்த பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**உதவித்திட்டங்கள்**

1. 22.05.2026 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக மார்த்தாண்டம் பணிமண்டலத்தின் 10 சுய உதவி குழுக்களில் உள்ள 50 உறுப்பினர்களுக்கு ரூபாய் 30,00,000/- கடனாக வழங்கப்பட்டது.
2. 17.06.2026 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக களியக்காவிளை பணிமண்டலத்தின் 10 சுய உதவி குழுக்களில் உள்ள 53 உறுப்பினர்களுக்கு ரூபாய் 30,00,000/- கடனாக வழங்கப்பட்டது.
3. 06.06.2026 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. மிட்ஸ் பணிமண்டலங்களுக்கு உட்பட்ட நடைக்காவு, ஆற்றூர் பகுதிகளில் உள்ள 243 மாணவர்களுக்கும், மதுரை பணிமண்டலத்துக்குட்பட்ட தேவதானபட்டி, ஜே.ஜே நகர் பகுதிகளில் 285 மாணவர்களுக்குமாக மொத்தம் 528 கல்வி உபகரணங்கள் அடங்கிய புத்தக பைகள் வழங்கப்பட்டன.
4. 09.06.2026 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 17 நோயாளிகளின் மருத்துவ செலவிற்கு ரூபாய் 85,000/- உதவித்தொகை வழங்கப்பட்டது.
5. 10.06.2026 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் வழியாக பயன்பெற்று தற்போது 12-ம் வகுப்பை நிறைவு செய்த



49 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 7,35,170/- கணக்கு முடித்து வழங்கப்பட்டது.

6. 18.06.2026 அன்று Billy Goat திட்டத்தின் வழியாக ஆடு வாங்கி வளர்ப்பதற்காக 3 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு ரூ. 21,000/- வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

1. 21.05.2026 அன்று தச்சூர்கோணம் பகுதியில் வைத்து மிட்ஸ் மற்றும் Sree Ram புற்றுநோய் அறக்கட்டளை மையம் இணைந்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாமை நடத்தியது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம்; அவர்கள் முகாமினை துவங்கி வைத்தார்கள். இந்த பரிசோதனை முகாமில் 35 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

2 03.06.2026 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் ஆய்வு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தை CRS பணியாளர்களான செல்வி சஞ்சனா, திரு. மனோரஞ்சன், திரு. பிரபத் குமார் ஆகியோர் நடத்தினர். இந்த கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் நான்கு சமூகப்பணி மையங்களில் உள்ள விண்ணைத்தொடு திட்ட பணியாளர்கள் மொத்தம் 12 பேர் கலந்து கொண்டனர்.

3 05.06.2026 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு உண்ணாமலைகடையில் வைத்து சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்வினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்கள். பின்னர் கறிவேப்பிலையின் பயன்கள் மற்றும் மருத்துவ குணங்கள்; குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் கறிவேப்பிலை செடி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் 85 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

4. 23.06.2026 அன்று உலக கைம்பெண்கள் தினத்தை முன்னிட்டு மிட்ஸ் மரியன் இயக்கத்தின் வழியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கைம்பெண்களை வரவழைத்து 'நமது இயக்கம்' என்ற பெயரில் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியினை திருமதி பரிமளா செல்வி அவர்கள் நடத்தினார்கள். தொடர்ந்து 60 வயதிற்குட்பட்ட கைம்பெண்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட கைம்பெண்கள் என இரு பிரிவினராக பிரித்து அவர்களின்; தேவைகள், அவர்கள் சந்திக்கும் இன்னல்கள், அவற்றிலிருந்து விடுபடும் வழிகள், நமது இயக்கம் வழியாக என்னென்ன செயல்பாடுகளை முன்னெடுக்கலாம் என்பது குறித்து குழு ஆய்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மொத்தம் 251 கைம்பெண்கள் கலந்து கொண்டனர்.
5. 24.06.2026 அன்று மிட்ஸ் மற்றும் சுரேஷ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் மருத்துவ முகாம் ஆதிச்சவிளாகம் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. காலை 10 மணி மதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் மொத்தம் 104 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
6. 25.06.2026 அன்று கிராத்தூர்ஆலய வளாகத்தில் வைத்து மிட்ஸ் மற்றும் Sree Ram புற்றுநோய் அறக்கட்டளை மையம் இணைந்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாமை நடத்தியது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் முகாமினை துவங்கி வைத்தார்கள். இந்த பரிசோதனை முகாமில் 50 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



# MCA
## Diocese of Marthandam

### 1. சபையளவிலான மேலாண்மைக்குழு கூட்டம்

சபையளவிலான மேலாண்மைக் குழு கூட்டமானது 02.06.2022 அன்று பிற்பகல் தலைவர் திரு. பைஜூ அவர்கள் தலைமையில் கானொலி மூலம் அறிக்கை மற்றும் வரவு செலவுகள் படிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஜூலை மாதம் 14 மற்றும் 15 நாட்களில் நடைபெறும் இறை ஊழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுநாள் நிகழ்வுகளில் அனைவரும் கலந்துகொள்ளவும், 15.07.2026-ல் நடைபெறும் மேலாண்மை குழு கூட்டம் காதோலிக்கோஸ் மையத்தில் வைத்து நடைபெறும் எனவும், செப்டம்பர் 17, 18 தியதிகளில் சென்னையில் அரையாண்டு அசம்பிளி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### 3. மறைமாவட்ட மேலாண்மை குழு கூட்டம்

மேலாண்மைக் குழ கூட்டம் 21.06.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு குழித்துறையில் வைத்து நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் வருங்கால வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

மார்த்தாண்டம் மத்திய பேரவையின் செயற்குழு கூட்டமானது 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணிக்கு குழித்துறை மத்திய பேரவை அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு மத்திய பேரவை தலைவர் சகோதரர் இயேசு ராஜன் அவர்கள் தலைமையேற்றார்கள். மத்திய பேரவையினுடைய ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை பிபின் அவர்கள் முன்னிலை வைத்தார்கள். கூட்டத்தில் மத்திய பேரவையினுடைய செயற்குழு உறுப்பினர்களும், வட்டார சபை பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சபையினுடைய சாதாரண நிகழ்வுகளை தொடர்ந்து சிறப்பு விவாதமாக மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் புதிதாக செயல்பட தொடங்கி இருக்கின்ற மெர்சி ஹோம் அதனுடைய செயல்பாடுகளில் வின்செண்ட் தே பவுல் சபை தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று மேதகு ஆயர்அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதனை குறித்து விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து வருகின்ற ஜூலை மாதம் 26 -ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மந்தாரம்புதூர் பகுதியில் இருக்கக்கூடிய மெர்சி ஹோமை சந்திப்பது என்றும் அங்குவைத்து மத்திய பேரவையினுடைய செயற்குழு கூட்டத்தினை நடத்துவது என்றும், மேலும் இந்த ஹோமிற்கு என்னென்ன உதவிகள் நமது இயக்கத்தால் செய்ய முடியும் என்பதை குறித்து நாம் அந்த கூட்டத்தில் வைத்து முடிவெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் இறுதி ஜெபத்தை தொடர்ந்து அருட்தந்தை அவர்களின் ஆசியுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.



# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

- 2026 மே 27-ம் தேதி அன்று திருச்சியில் நடைபெற்ற **TNBCHCC** செயலர் கூட்டத்தில் **HOM** இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் பங்கேற்றார்கள். இதில் சுமார் 16 பேர் கலந்துகொண்டார்கள்.
- 2026 ஜூன் 3-ம் தேதி அன்று குழித்துறை **HOM** வளாகத்தில் வைத்து நடைபெற்ற **HOM** பணியாளர்களுக்கான உடல் நல ஆரோக்கியம் மற்றும் சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வு கூட்டத்தில் இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு உரையாற்றினார்கள். இதில் சுமார் 25 பேர் கலந்து கொண்டார்கள்.
- 2026 ஜூன் 11-ம் தேதி அன்று முஞ்சிறை சித்தா கல்லூரி சார்பாக குழித்துறை **HOM** சிறப்புப் பள்ளியில் இயற்கை மருத்துவமுகாம் நடைபெற்றது. இதில் சுமார் 120 பேர் கலந்து கொண்டார்கள்.
- 2026 ஜூன் 15-ம் தேதி அன்று குழித்துறை **HOM** வளாகத்தில் வைத்து நடைபெற்ற **TNBCHCC** மார்த்தாண்டம் மறைமாவட்ட நிர்வாகிகள் கூட்டம் இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சுமார் 6 பேர் கலந்து கொண்டார்கள்.
- 2026 ஜூன் 26-ம் தேதி உலகபோதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கருங்கல் மற்றும் மாங்கரை பகுதியில் நடைபெற்ற விழிப்புணர்வு ஜோதி ஓட்டம் மற்றும் பேரணியில் **TNBCHCC** நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டனர். இதில் சுமார் 250 பேர் கலந்து கொண்டார்கள்.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை
தோமஸ் காவுவிளை
ஜூலை 03



அருட்தந்தை
ஜெப பெனடிக்ட்
ஜூலை 11



அருட்தந்தை
அலெக்ஸ் குமார்
ஜூலை 17



அருட்தந்தை
அபின்சன் அலெக்ஸ்
ஜூலை 17



அருட்தந்தை
ஜிபு மேத்யூ
ஜூலை 25

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2026 ஜூலை** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 17, 18 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

✦ **கருத்தரங்கு :** மரியாயின் சேனை மரியாகிரி கியூரியா சார்பில் நடைபெற்ற கருத்தரங்கானது 21.06.2026 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் புனித விண்னேற்பு அன்னை ஆலயம் மரியாகிரியில் வைத்து நடைபெற்றது. சேனை ஆரம்ப ஜெபத்தை தொடர்ந்து அருட்தந்தை வினுகுமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கி இக்கருத்தரங்கை துவக்கி வைத்தார்கள். தொடர்ந்து ரீஜியாவின் செயலர் Sr. பாஸ்கா மேரி அவர்கள் இக்கருத்தரங்கை வழி நடத்தினார்கள். மாலை 4.30 மணியளவில் நிறைவடைந்த இக் கருத்தரங்கில் கொமித்சிய நிர்வாகிகள் உட்பட 60 பேர் கலந்துகொண்டனர்.

# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

## புதிய தாளாளர் பொறுப்பெடுத்தல் நிகழ்வு

கிராத்தூர் மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியின் புதிய தாளாளராக அருட்தந்தை ஷிஜு ஜோஸ் அவர்கள் 18.06.2026 அன்று பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் பழைய தாளாளர் அருட்தந்தை பெர்னார்டு அவர்கள் புதிய தாளாளர் அவர்களுக்கு பொறுப்பை கொல்லங்கோடு மறைவட்ட முதன்மைக்குரு பேரருட்தந்தை ஜோஸ் அடிகளார் முன்னிலையில் ஒப்படைத்தார். மேலும் HOM பள்ளியின் தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் உடனிருந்தார். மேலும் கல்லூரி முதல்வர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் உடனிருந்தார்கள்.



# HOM - SPECIAL SCHOOL
### FOR THE INTELLECTUALLY DISABLED

## தமிழக முதல்வரின் புகைப்படம் வரைந்து பிறந்தநாள் பரிசழித்த சிறப்புக் குழந்தை

குழித்துறையில் அமைந்துள்ள ஹோம் அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்புப்பள்ளியில் 22.06.2026 தமிழக முதல்வர் திரு. C. ஜோசப் விஜய் அவர்களின் 52-வது பிறந்தநாள் கொண்டாடும் நிகழ்வு நடைபெற்றது. ஹோம் சிறப்புப்பள்ளி தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் சிறப்புப்பள்ளியின் செயல்பாடுகள் எடுத்துக் கூறி அனைவரையும் வரவேற்றார்கள். அருட்தந்தை ரெஜின் அவர்கள் தலைமைதாங்கி இறைவேண்டல் செய்தார்கள். தமிழக வெற்றிக் கழக குமரி மாவட்ட ஒன்றிய செயலாளர் திரு. சபின் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். சிறப்புக் குழந்தைகள் தமிழக முதல்வருக்கு பிறந்தநாள் வாழ்த்துப்பாடல் பாடி வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள். தொடர்ந்து சிறப்புக்குழந்தைகளுக்கு தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் சிறப்பு மதிய உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். இக்கூடுகையில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். தமிழக முதல்வரின் புகைப்படத்தை தத்ரூபமாக வரைந்து தமிழக முதல்வருக்கு பரிசளித்த சிறப்புக்குழந்தை பிரிட்ஸ் ரியான்னை பலரும் பாராட்டினார்கள்.

# ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள்




- **1-25** ➤ ஆயரின் ஐரோப்பா சுற்றுப்பயணம்.
- **26** ➤ குழித்துறை மறைமாவட்டம் புதுவசந்தம் சார்பாக நடைபெற்ற போதை விழிப்புணர்வு பேரணிக்கு தலைமை தாங்கி விழிப்புணர்வு உரையாற்றினார்.
- **28** ➤ சாரூர் தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- **29** ➤ மார்த்தாண்டம் மறைமாவட்ட தினவிழா மற்றும் புனித பவுலடியாரின் நாமவிழா திருப்பலியை மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் மேதகு ஆயர் யூஹானோன் மார் அலெக்சியோஸ் உடன் இணைந்து நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- **29** ➤ MaCKK (Malankarai Catholic Kalai Koodam) கலைக்கூடத்தை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.
- **30** ➤ நாலாஞ்சிறை புனித மரியன்னை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு வகுப்பெடுத்தார்.




# இம்மாதம் நினைவு கூர


ஜூலை 2026

1 – தலைமைக்குரு ஆரோன்
3 – துக்றோனோ (மார் தோமாவின் நினைவு நாள்)
ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் பெயர்விழா
5 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஆறாம் ஞாயிறு
எழுபத்திரண்டு அறிவிப்பாளர்கள்
குடும்ப தினம்
6 – புலிக்கோட்டில் ஜோசப் ரம்பானின் நினைவு
புனித மரிய கொரேத்தி
11 – புனித பெனடிக்ட்
12 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஏழாம் ஞாயிறு
13 – மார் சீலாஸ், ஆன்றணி மார் சில்வானூஸ்
ஆண்டகையின் பெயர்விழா
15 – வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ்
ஆண்டகையின் நினைவு (1953)
மார் குரியாக்கோஸ், மார்த்தா யூலித்தியம்மாள்
ஆன்றணி மார் சில்வானூஸ் மற்றும் மேத்யூஸ்
மார் போளிக்கார்போஸ் ஆண்டகையரின் ஆயர்
திருநிலைப்பாடு (2022)
16 – புனித கார்மேல் அன்னை
17 – தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின்
திருநிலைப்பாடு (1997)
19 – பெந்தக்கோஸ்துக்குப்பின் எட்டாம் ஞாயிறு
புனித மக்ரீனா
20 – இறைவாக்கினர் எலியா
21 – இறைவாக்கினர் தானியேல்
22 – புனித மகதலா மரியாள்
23 – இறைவாக்கினர் எசேக்கியேல்
24 – லபனோனின் தாபகராகிய புனித சர்பேல்
26 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஒன்பதாம் ஞாயிறு
28 – புனித அல்போன்சா
29 – பெத்தானியாவின் மார்த்தாவும் மரியாவும் லாசரும்
31 – லொயோலாவின் புனித இக்னேஷியஸ்


3


6


15


16


22


28

## மார்த்தாண்டம் மறைமாவட்ட விழா - மேதகு ஆயரின் பெயர்விழா




## குருமடச் செய்திகள்




## Malankarai Catholic Kalai Koodam






## MIDS





## MCA




## திருத்தந்தையுடன் ஆயரின் சந்திப்பு



## Health for One Million (HOM)




## மறைபரப்பு தளச்செய்திகள்




## Mar Chrysostom B.Ed College



## Hom - Special School